**செ.வெ..எண். 55** **நாள். 28.03.2018**

**பத்திரிக்கை செய்தி**

**அரசுப்பணியாளர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 31,03,2018 அன்று நடைபெற இருந்தது ஒத்திவைக்கப்பட்டு மறுதேதியான 07.04.2018 மற்றும் 08.04.2018 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்ட விளையாட்டுப் பிரிவின் சார்பாக அரசுப்பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 2017 – 2018 ம் ஆண்டிற்கான தடகளம் மற்றும் குழுப் போட்டிகள் 31.03.2018 வரை நடைபெற இருந்தது நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு மறு தேதி அறிவிக்கப்படுகிறது. 07.04.2018 மற்றும் 08.04.2018 ஆகிய தேதிகளில் காலை 6.00 மணிக்கு துவங்கி நடைபெற உள்ளது. இது குறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், 07.04.2018 அன்று தடகளப் போட்டி **ஆண்களுக்கு** 100 மீ.ஓ, 200 மீ.ஓ, 800 மீ.ஓ, 1500 மீ.ஓ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 4x100 மீட்டர் தொடரோட்டப்போட்டியும், **பெண்களுக்கு** 100 மீ.ஓ, 200 மீ.ஓ, 400 மீ.ஓ, 800 மீ.ஓ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டுஎறிதல், 4x100 மீட்டர் தொடரோட்டப் போட்டியும், கூடைப்பந்து, கபடி, கையுந்துபந்து மற்றும் கால்பந்து (ஆண்களுக்கு மட்டும்) கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திலும், 08.04.2018 அன்று இறகுப்பந்து, டென்னிஸ், மற்றும் டேபிள் டென்னிஸ் ஆகிய போட்டிகள் கரூர் ஆபிசர்ஸ் கிளப் மைதானத்திலும், கிரிக்கெட் போட்டி (ஆண்களுக்கு மட்டும்) கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திலும் நடைபெற உள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விதிமுறைகள் அரசுப்பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் அரசுத் துறைகளில் பணிபுரியும் முழு நேர அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கு கொள்ளலாம். மின்சாரத்துறை காவல்துறை, தீயணைப்புத்துறையில் பணியாற்றும் சீருடை பணியாளர்கள் கிரிக்கெட் போட்டியில் மட்டும் பங்கு பெறலாம். வெற்றி பெறுபவர்கள் மாநிலப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது. அரசு அலுவலங்களில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் பங்கு கொள்ள இயலாது. உடற்கல்வித்துறையில் பணியாற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள்/ இயக்குநர்கள் பயிற்சியாளர்கள் பங்கு கொள்ளலாம். இப்போட்டியில் கலந்து வயது வரம்பு கிடையாது. போட்டியில் முதலிடம் பெறும் வீரர்/வீராங்கனைகளுக்கு மாநில அளவில் கலந்து கொள்பவர்களுக்கு சீருடை வழங்கப்படும். போட்டியில் கலந்து கொள்வர்களுக்கு பயணப்படி/ தினப்படி அவரவர் பணிபுரியும் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அரசுப்பணியில் புதிதாக சேர்ந்து 6 மாதங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் போட்டியில் கலந்து கொள்ளலாம். வெற்றி பெற்ற வீரர்/வீராங்கனைகள் கரூர் மாவட்டத்தின் சார்பாக மாநிலப் போட்டிக்கு அரசு செலவில் அழைத்துச் செல்லப்படுவார்கள். வெற்றி பெறும் வீரர்/வீராங்கனைகளுக்கு விளையாட்டு சீருடைகள் மாநிலப் போட்டிக்கு செல்லும் போது அரசுச் செலவில் வழங்கப்படும். தடகளப் போட்டியில் ஒருவர் ஏதேனும் இரண்டு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ளலாம். ஒரு அலுவலகத்திலிருந்து எத்தனை நபர்கள் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்/வீராங்கனைகள் தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட ID கார்டு கொண்டு வருதல் வேண்டும்.

மேலும் தொடர்புக்கு போட்டியின் ஒருங்கிணைப்பாளர் தொலைபேசி எண். 9444753260 என்ற எண்ணில் தொர்பு கொள்ளலாம். எனவே அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் தங்கள் துறையில் பணிபுரியும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை போட்டியில் கலந்து கொள்ள சரியாக காலை 9.00 ணிக்கு போட்டி நடைபெறும் மையத்திற்கு அனுப்பிவைத்து போட்டியில் அதிக அளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.